# PAPER-III
# TAMIL

**Signature and Name of Invigilator**

1. (Signature) ___________________________

   (Name) _______________________________

2. (Signature) ___________________________

   (Name) _______________________________

OMR Sheet No. : ..............................................

(To be filled by the Candidate)

Roll No. | | | | | | | | |

(In figures as per admission card)

Roll No.__________________________________

(In words)

| J | 2 | 6 | 1 | 2 |
|---|---|---|---|---|

Time : 2 $^{1}/_{2}$ hours] [Maximum Marks : **150**

Number of Pages in this Booklet : **16**

Number of Questions in this Booklet : **75**

## Instructions for the Candidates

1. Write your roll number in the space provided on the top of this page.
2. This paper consists of seventy five multiple-choice type of questions.
3. At the commencement of examination, the question booklet will be given to you. In the first 5 minutes, you are requested to open the booklet and compulsorily examine it as below :
   (i) To have access to the Question Booklet, tear off the paper seal on the edge of this cover page. Do not accept a booklet without sticker-seal and do not accept an open booklet.
   (ii) **Tally the number of pages and number of questions in the booklet with the information printed on the cover page. Faulty booklets due to pages/questions missing or duplicate or not in serial order or any other discrepancy should be got replaced immediately by a correct booklet from the invigilator within the period of 5 minutes. Afterwards, neither the Question Booklet will be replaced nor any extra time will be given.**
   (iii) After this verification is over, the OMR Sheet Number should be entered on this Test Booklet.
4. Each item has four alternative responses marked (A), (B), (C) and (D). You have to darken the circle as indicated below on the correct response against each item.
   **Example :** (A) (B) ● (D)
   where (C) is the correct response.
5. Your responses to the items are to be indicated in the **OMR Sheet given inside the Booklet only.** If you mark at any place other than in the circle in the OMR Sheet, it will not be evaluated.
6. Read instructions given inside carefully.
7. Rough Work is to be done in the end of this booklet.
8. If you write your Name, Roll Number, Phone Number or put any mark on any part of the OMR Sheet, except for the space allotted for the relevant entries, which may disclose your identity, or use abusive language or employ any other unfair means, you will render yourself liable to disqualification.
9. You have to return the test question booklet and Original OMR Sheet to the invigilators at the end of the examination compulsorily and must not carry it with you outside the Examination Hall. You are, however, allowed to carry duplicate copy of OMR Sheet on conclusion of examination.
10. **Use only Blue/Black Ball point pen.**
11. **Use of any calculator or log table etc., is prohibited.**
12. **There is no negative marks for incorrect answers.**

## परीक्षार्थियों के लिए निर्देश

1. पहले पृष्ठ के ऊपर नियत स्थान पर अपना रोल नम्बर लिखिए ।
2. इस प्रश्न-पत्र में पचहत्तर बहुविकल्पीय प्रश्न हैं ।
3. परीक्षा प्रारम्भ होने पर, प्रश्न-पुस्तिका आपको दे दी जायेगी । पहले पाँच मिनट आपको प्रश्न-पुस्तिका खोलने तथा उसकी निम्नलिखित जाँच के लिए दिये जायेंगे, जिसकी जाँच आपको अवश्य करनी है :
   (i) प्रश्न-पुस्तिका खोलने के लिए उसके कवर पेज पर लगी कागज की सील को फाड़ लें । खुली हुई या बिना स्टीकर-सील की पुस्तिका स्वीकार न करें ।
   (ii) **कवर पृष्ठ पर छपे निर्देशानुसार प्रश्न-पुस्तिका के पृष्ठ तथा प्रश्नों की संख्या को अच्छी तरह चैक कर लें कि ये पूरे हैं । दोषपूर्ण पुस्तिका जिनमें पृष्ठ/प्रश्न कम हों या दुबारा आ गये हों या सीरियल में न हों अर्थात् किसी भी प्रकार की त्रुटिपूर्ण पुस्तिका स्वीकार न करें तथा उसी समय उसे लौटाकर उसके स्थान पर दूसरी सही प्रश्न-पुस्तिका ले लें । इसके लिए आपको पाँच मिनट दिये जायेंगे । उसके बाद न तो आपकी प्रश्न-पुस्तिका वापस ली जायेगी और न ही आपको अतिरिक्त समय दिया जायेगा ।**
   (iii) इस जाँच के बाद OMR पत्रक की क्रम संख्या इस प्रश्न-पुस्तिका पर अंकित कर दें ।
4. प्रत्येक प्रश्न के लिए चार उत्तर विकल्प (A), (B), (C) तथा (D) दिये गये हैं । आपको सही उत्तर के वृत्त को पेन से भरकर काला करना है जैसा कि नीचे दिखाया गया है ।
   **उदाहरण :** (A) (B) ● (D)
   जबकि (C) सही उत्तर है ।
5. प्रश्नों के उत्तर **केवल प्रश्न पुस्तिका के अन्दर दिये गये OMR पत्रक पर ही** अंकित करने हैं । यदि आप OMR पत्रक पर दिये गये वृत्त के अलावा किसी अन्य स्थान पर उत्तर चिह्नांकित करते हैं, तो उसका मूल्यांकन नहीं होगा ।
6. अन्दर दिये गये निर्देशों को ध्यानपूर्वक पढ़ें ।
7. कच्चा काम (Rough Work) इस पुस्तिका के अन्तिम पृष्ठ पर करें ।
8. यदि आप OMR पत्रक पर नियत स्थान के अलावा अपना नाम, रोल नम्बर, फोन नम्बर या कोई भी ऐसा चिह्न जिससे आपकी पहचान हो सके, अंकित करते हैं अथवा अभद्र भाषा का प्रयोग करते हैं, या कोई अन्य अनुचित साधन का प्रयोग करते हैं, तो परीक्षा के लिये अयोग्य घोषित किये जा सकते हैं ।
9. आपको परीक्षा समाप्त होने पर प्रश्न-पुस्तिका एवं मूल OMR पत्रक निरीक्षक महोदय को लौटाना आवश्यक है और परीक्षा समाप्ति के बाद उसे अपने साथ परीक्षा भवन से बाहर न लेकर जायें । हालांकि आप परीक्षा समाप्ति पर OMR पत्रक की डुप्लीकेट प्रति अपने साथ ले जा सकते हैं ।
10. **केवल नीले/काले बाल प्वाईंट पेन का ही इस्तेमाल करें ।**
11. **किसी भी प्रकार का संगणक (कैलकुलेटर) या लाग टेबल आदि का प्रयोग वर्जित है ।**
12. **गलत उत्तरों के लिए कोई अंक काटे नहीं जाएँगे ।**

**TAMIL**

**தமிழ்**

**Paper-III**

**தாள் - III**

**Note :** This paper contains **seventy five (75)** objective type questions of **two (2)** marks each. **All** questions are compulsory.

குறிப்பு : இவ்வினாத்தாள் எழுபத்தைந்து (75) விடைதெரி வினாக்களைக் கொண்டது. ஒவ்வொரு வினாவிற்கும் இரண்டு (2) மதிப்பெண்கள் உண்டு. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

**1.** யாப்பு வடிவத்தால் பெயர் பெற்ற எட்டுத்தொகை நூல்

(A) புறநானூறு (B) நற்றிணை

(C) ஐங்குறுநூறு (D) கலித்தொகை

**2.** உதயண குமாரகாவியம் எதன் சுருக்கம் ?

(A) சூளாமணி (B) சீவகசிந்தாமணி

(C) பெருங்கதை (D) நீலகேசி

**3.** என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ்செய்யு மாறே - எனப் பாடியவர்

(A) அப்பர் (B) சுந்தரர்

(C) திருமூலர் (D) மாணிக்கவாசகர்

**4.** அரை மாத்திரை உடையது

(A) அ (B) ஆ

(C) ஐ (D) ஃ

**5.** ‘பாற்சோறு’ என்பதில் இடம்பெறும் புணர்ச்சி வகை

(A) இயல்பு (B) மெய்பிறிதாதல்

(C) குன்றல் (D) மிகுதல்

**6.** ‘தஞ்சக் கிளவி’ உணர்த்தும் பொருண்மை

(A) உண்மை (B) தண்மை

(C) எண்மை (D) வண்மை

**7.** ஏ.கே. இராமானுஜன் மொழி பெயர்த்த நூல்

(A) ஆசியஜோதி (B) சங்க அகக் கவிதை

(C) ஏழைபடும்பாடு (D) கோதானம்

**8.** பின்வருவனவற்றுள் தலித்திய புதினம்

(A) மாமிசப்படைப்பு (B) நெடுங்குருதி

(C) கோவேறு கழுதை (D) கோபல்லகிராமம்

9. ‘அசோகவனம்’ எனும் நூலை எழுதியவர்
(A) மறைமலை அடிகள் (B) திரு.வி.க.
(C) ரா.பி.சேதுப்பிள்ளை (D) ஆ.முத்துசிவன்

10. ‘மலையருவி’ என்னும் நாட்டுப்பறப் பாடல்களைத் திரட்டியவர்
(A) சீகன்பால்கு (B) பர்ஸ்மக்வீன்
(C) வீரமாமுனிவர் (D) எல்லீஸ்

11. இராமப்பய்யன் அம்மானை என்பது
(A) கலம்பகம்
(B) தூது
(C) நாட்டுப்புறக் கதைப்பாடல்
(D) பிள்ளைத்தமிழ்

12. நாட்டுப்புற இலக்கிய வகைகளுள் ஒன்று
(A) குத்துப்பாட்டு (B) வில்லுப் பாட்டு
(C) பள்ளுப்பாட்டு (D) வள்ளைப் பாட்டு

13. ‘வட்டிகைச் செய்தி’ என அழைக்கப்படும் கலை
(A) ஓவியம் (B) சிற்பம்
(C) நாட்டியம் (D) இசை

14. பிற்காலச் சோழர்களில் ஆட்சிச் சிறப்புக்காகப் ‘பண்டித சோழன்’ என அழைக்கப்பட்டவர்
(A) இராசராசன் (B) பராந்தகன்
(C) இராசதிராசன் (D) இராசேந்திரன்

15. ‘நுதலிப்புகுதல்’ என்பது
(A) நூற்குற்றம் (B) தந்திர உத்தி
(C) நூற்குணம் (D) மதவிகற்பம்

16. அடிமோனை என்பது
(A) பாவினத்துள் ஒன்று (B) வண்ணத்துள் ஒன்று
(C) தளையுள் ஒன்று (D) தொடையுள் ஒன்று

17. சிறுபஞ்சமூலத்தில் இடம் பெற்றுள்ள வேர்கள்
(I) நெருஞ்சி, மல்லி, கண்டங்கத்திரி, சிறுவழுதுணை
(II) நெருஞ்சி, மல்லி, நாகசேகரம், சிறுவழுதுணை
(III) நெருஞ்சி, மல்லி, கண்டங்கத்திரி, மிளகு
(IV) நெருஞ்சி, மல்லி, கண்டங்கத்திரி, திப்பிலி
இவற்றுள்
(A) I சரி
(B) அனைத்தும் சரி
(C) அனைத்தும் சரியல்ல
(D) II, III, IV சரி

18. பதினோராம் திருமுறை
(I) நாற்பது நூல்களின் தொகுதி
(II) பன்னிரு அருளாளர்கள் இயற்றிய நூல்களின் தொகுதி
(III) பிரபந்தமாலை எனக் கூறப்படும்
(IV) பல சமயங்கள் சார்ந்த நூல்களின் தொகுதி
இவற்றுள்
(A) I, II, IV சரி
(B) I, II, III சரி
(C) I,III, IV சரி
(D) I, II, III, IV சரி

19. திருமழிசையாழ்வார்
(I) பக்திசாகரர் என அழைக்கப்பட்டவர்
(II) சிவவாக்கியர் எனும் சித்தராக இருந்தார்
(III) கணிகண்ணனின் குரு
(IV) திருவாசிரியம் பாடியவர்
இவற்றுள்
(A) I, II, IV சரி
(B) I, II, III சரி
(C) I, III, IV சரி
(D) I, II, III, IV சரி

20. 'உம்' உணர்த்தும் பொருள்
(I) முற்று, எண், தெரிநிலை, ஆக்கம்
(II) முற்று, எண், தேற்றம், ஆக்கம்
(III) முற்று, எண், குறிப்பு, ஆக்கம்
(IV) முற்று, எண், அச்சம், ஆக்கம்
இவற்றுள்
(A) I சரி
(B) II சரி
(C) III சரி
(D) IV சரி

21. பகுபத உறுப்புகளாக அமைவன
(I) பகுதி, விகுதி, இடைநிலை, விகாரம்
(II) பகுதி, விகுதி, சாரிகை, சந்தி
(III) பகுதி, விகுதி, சந்தி, விகாரம்
(IV) பகுதி, விகுதி, ஏவல், சாரியை
இவற்றுள்
(A) அனைத்தும் சரி
(B) II சரி
(C) III சரி
(D) IV சரி

22. அப்துல் ரகுமான்
(I) பரமக் கவிஞர்
(II) எள்ளல் கவிஞர்
(III) உவமைக் கவிஞர்
(IV) மரபுக் கவிஞர்
இவற்றுள்
(A) I, II, IV சரி
(B) I, II, III சரி
(C) I, III, IV சரி
(D) I, II, III, IV சரி

23. வாழ்க்கை வரலாறு எழுதிய ஆசிரியர்
(I) வா. ரா.
(II) ரகுநாதன்
(III) மு.வ.
(IV) சுந்தா
இவற்றுள்
(A) I, II, III சரி
(B) I, II, IV சரி
(C) I, III, IV சரி
(D) I, II, III, IV சரி

24. கண்ணதாசன் நடத்திய இதழ்கள்
(I) தென்றல்
(II) இலக்கியம்
(III) கண்ணதாசன்
(IV) கடிதம்
இவற்றுள்
(A) I, II, IV சரி
(B) I, II, III சரி
(C) I, II, III, IV சரி
(D) I, III, IV சரி

25. குறிஞ்சித்திணைக்கு உரிய பொழுது
(I) கூதிர்
(II) யாமம்
(III) பனியெதிர் பருவம்
(IV) மாலை
இவற்றுள்
(A) I, II, IV சரி
(B) II, III, IV சரி
(C) I, II, III, IV சரி
(D) I, II, III, சரி

26. களவில் தலைவியின் நிரை
(I) ஒருதலை உள்ளுதல்
(II) நாணுவரை இறத்தல்
(III) நோக்குவ எல்லாம் அவையே போல்வன
(IV) மெலிவு விலக்குறுத்தல்
இவற்றுள்
(A) I, II, IV சரி
(B) I, II, III சரி
(C) I, III, IV சரி
(D) I, II, III, IV சரி

27. உவமக்கிளவி
(I) வினையினும் பயத்தினும் வருவது
(II) உறுப்பினும் உருவினும் வருவது
(III) இறப்பினும் பிறப்பினும் வருவது
(IV) பிறப்பின் வருவது
இவற்றுள்
(A) I, II, III சரி
(B) I, II, IV சரி
(C) I, III, IV சரி
(D) I, II, III, IV சரி

28. பழங்காலத் துறைமுகங்கள்

(I) முசிறி

(II) சென்னை

(III) புகார்

(IV) கொற்கை

இவற்றுள்

(A) I, II, III, IV சரி (B) I, II, III சரி

(C) I, II, IV சரி (D) I, III, IV சரி

29. சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் கொடிகளில் பொறித்த உருவங்கள்

(I) வில்

(II) புலி

(III) வேல்

(IV) கயல்

இவற்றுள்

(A) I,II, III, IV சரி (B) I, II, III சரி

(C) I, II, IV சரி (D) I, III, IV சரி

30. பண்டைத் தமிழர் விளையாட்டுகள்

(I) வட்டாடல்

(II) மரம் ஏறுதல்

(III) ஊசலாடுதல்

(IV) வண்டலிழைத்தல்

இவற்றுள்

(A) I, II, III, IV சரி (B) I, II, IV சரி

(C) I, III, IV சரி (D) I, II, III சரி

31. உறுதிக்கூற்று: (உ) நாலடியார் நூலின் பெயர்.
காரணம்: (கா) நான்கு அடியவர்களால் பாடப் பெற்றதால் .

(A) (உ) சரி ; (கா) சரியன்று

(B) (உ) சரியன்று : (கா) சரி

(C) இரண்டும் சரி

(D) இரண்டும் சரியல்ல

32. உறுதிக்கூற்று: (உ) திருக்கயிலாய ஞானஉலாவிற்கு ஆதி உலா என்று பெயர்.
காரணம்: (கா) உலா நூல்களில் முதலில் இயற்றப் பட்டதால்.

(A) (உ) சரி ; (கா) சரி

(B) (உ) சரியன்று : (கா) சரி

(C) (உ) சரி, (கா) சரியன்று

(D) இரண்டும் சரியல்ல

33. <u>உறுதிக்கூற்று</u>: (உ) உரையாசிரியர் என்று அழைக்கப்படுபவர் இளம்பூரணர்.
<u>காரணம்</u>: (கா) தொல்காப்பியத்திற்கு இவர் சிறப்பான உரை எழுதியதால்.
(A) (உ) சரி ; (கா) சரியன்று
(B) (உ) சரியன்று : (கா) சரி
(C) இரண்டும் சரி
(D) இரண்டும் சரியல்ல

34. <u>உறுதிக்கூற்று</u>: (உ) கடல்கடந்தான் என்பது வேற்றுமைத் தொகை.
<u>காரணம்</u>: (கா) கடல் போன்று விரைவாகக் கடந்தான் என அவ்வாக்கியம் பொருள்படுகிறது.
(A) (உ) ; (கா) இரண்டும் சரியன்று
(B) (உ) ; (கா) இரண்டும் சரி
(C) (உ) சரியன்று : (கா) சரி
(D) (உ) சரி ; (கா) சரியன்று

35. <u>உறுதிக்கூற்று</u>: (உ) செய்யுளில் செந்தொடை அமையப் பாடுவது சிறப்பு.
<u>காரணம்</u>: (கா) அசை, சீர், முதலிய தொடைகள் இசையாதது செந்தொடை .
(A) (உ) ; (கா) இரண்டும் சரியன்று
(B) (உ) ; (கா) இரண்டும் சரி
(C) (உ) சரி : (கா) சரியன்று
(D) (உ) சரியன்று ; (கா) சரி

36. <u>உறுதிக்கூற்று</u>: (உ) நின்ற சீரின் ஈற்றசையும் வருஞ்சீரின் முதலசையும் தம்முள் ஒன்றாத நிலையும் உண்டு.
<u>காரணம்</u>: (கா) நேரொன்றாசிரியத் தளையே.
(A) (உ) சரி ; (கா) சரியன்று
(B) (உ) சரியன்று ; (கா) சரி
(C) இரண்டும் சரி
(D) இரண்டும் சரியல்ல

37. <u>உறுதிக்கூற்று</u>: (உ) உருவகங்களுள் முற்று உருவகம் என ஒன்று உண்டு.
<u>காரணம்</u>: (கா) அவையவமும் அவயவியுமாக முருவதும் உருவகம் செய்வர் புலவர் .
(A) (உ) சரி ; (கா) சரியன்று
(B) (உ) சரியன்று ; (கா) சரி
(C) இரண்டும் சரி
(D) இரண்டும் சரியல்ல

38. <u>உறுதிக்கூற்று</u>: *(உ) மணிக்கொடியின் காலமே சிறுகதையின் பொற்காலம்.*
<u>காரணம்</u>: *(கா) கல்கி அக்காலத்தில் எழுதினார்.*
(A) *(உ) சரி ; (கா) சரியன்று*
(B) *(உ) சரியன்று ; (கா) சரி*
(C) *இரண்டும் சரி*
(D) *இரண்டும் சரியல்ல*

39. <u>உறுதிக்கூற்று</u>: *(உ) பரிதிமாற் கலைஞர் நாடக இலக்கண ஆசிரியர்.*
<u>காரணம்</u>: *(கா) அவர் 'மான விஜயம்' எழுதினார்.*
(A) *(உ) சரி ; (கா) சரியன்று*
(B) *(உ) சரியன்று ; (கா) சரி*
(C) *இரண்டும் சரி*
(D) *இரண்டும் சரியல்ல*

40. <u>உறுதிக்கூற்று</u>: *(உ) தேசிக விநாயகம் பிள்ளை ஒரு மொழி பெயர்ப்பாளர்.*
<u>காரணம்</u>: *(கா) அவர் 'ஆசிய சோதியின்' ஆசிரியர்.*
(A) *(உ) சரி ; (கா) சரியன்று*
(B) *(உ) சரியன்று ; (கா) சரி*
(C) *இரண்டும் சரி*
(D) *இரண்டும் சரியல்ல*

41. <u>உறுதிக்கூற்று</u>: *(உ) பண்டைத் தமிழகத்தில் ஒப்பனைக் கலை மேலோங்கி இருந்தது.*
<u>காரணம்</u>: *(கா) பெண்கள் ஒப்பனைக்கு நான்கு வகைப் பூக்களைச் சூடிக்கொண்டனர்.*
(A) *இரண்டும் சரி*
(B) *(உ) சரி ; (கா) சரியன்று*
(C) *(உ) சரியன்று : (கா) சரி*
(D) *இரண்டும் சரியல்ல*

42. <u>உறுதிக்கூற்று</u>: *(உ) பழந்தமிழன் திருமணத்தின் போது மெட்டி அணியும் வழக்கம் இல்லை.*
<u>காரணம்</u>: *(கா) திருமணத்தின் போது பெண்கள் மங்கல அணி அணிந்துள்ளனர்.*
(A) *(உ) சரி ; (கா) சரியன்று*
(B) *இரண்டும் சரி*
(C) *(உ) சரியன்று : (கா) சரி*
(D) *இரண்டும் சரியல்ல*

43. <u>உறுதிக்கூற்று</u>: (உ) சிலப்பதிகாரத்தில் இசை இலக்கணம் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.
<u>காரணம்</u>: (கா) தமிழகத்தில் இத்துறை முழு வளர்ச்சி பெற்றிருந்தது.
(A) (உ) சரியன்று ; (கா) சரி
(B) (உ) சரி ; (கா) சரியன்று
(C) இரண்டும் சரியல்ல
(D) இரண்டும் சரி

44. <u>உறுதிக்கூற்று</u>: (உ) ஆகவே என்பது இணைப்பிடைச்சொல் .
<u>காரணம்</u>: (கா) இரு சொற்களையும் அது இணைக்கிறது .
(A) இரண்டும் சரி
(B) இரண்டும் சரியல்ல
(C) (உ) சரி : (கா) சரியன்று
(D) (உ) சரியன்று ; (கா) சரி

45. <u>நிரல் படுத்துக</u>.
காலவரிசையில் சிறுகாப்பியங்கள்
(A) சூளாமணி, உதயணகுமாரகாவியம், யசோதர காவியம், நீலகேசி
(B) சூளாமணி, நீலகேசி,உதயணகுமார காவியம், யசோதர காவியம்
(C) நீலகேசி, சூளாமணி, உதயகுமாரகாவியம், யசோதர காவியம்
(D) உதயணகுமார காவிய.ம், யசோதர காவியம், சூளாமணி, நீலகேசி

46. <u>நிரல் படுத்துக</u>.
பிற்காலப் பக்தி இலக்கிய ஆசிரியர்களின் கால வரிசை
(A) குமரகுருபரர், தாயுமானவர், அருணகிரிநாதர், வள்ளலார்
(B) தாயுமானவர், குமரகுருபரர், அருணகிரிநாதர், வள்ளலார்
(C) அருணகிரிநாதர், தாயுமானவர், வள்ளலார், குமரகுருபரர்
(D) குமரகுரபரர், அருணகிரிநாதர், தாயுமானவர், வள்ளலார்

47. <u>நிரல் படுத்துக</u>.
அறத்தொடு நிற்கும் தோழியின் கூற்றுவகை
(A) எளித்தல், ஏத்தல், வேட்கை உரைத்தல், கூறுதல்
(B) எளித்தல், வேட்கைஉரைத்தல், ஏத்தல், கூறுதல்
(C) எளித்தல், கூறுதல், ஏத்தல், வேட்கை உரைத்தல்
(D) எளித்தல், வேட்கை உரைத்தல், கூறுதல், ஏத்தல்

48. <u>நிரல் படுத்துக</u>.
தலைவியின் திறம்
(A) செறிவு, செம்மை, செப்பு, நிறைவு
(B) செறிவு, நிறைவு, செம்மை, செப்பு
(C) செறிவு, செப்பு, நிறைவு, செம்மை
(D) செறிவு, செம்மை, நிறைவு, செப்பு

49. <u>நிரல் படுத்துக.</u>
காலநிரலில் நிகண்டுகளின் ஆசிரியர்கள்
(A) திவாகரர், மண்டலபுருடர், பிங்கலர், சிதம்பர ரேவண சித்தர்
(B) திவாகரர், பிங்கலர், மண்டலபுருடர், சிதம்பர ரேவண சித்தர்
(C) திவாகரர், பிங்கலர், சிதம்பர ரேவண சித்தர், மண்டல புருடர்
(D) திவாகரர், சிதம்பர ரேவண சித்தர், மண்டல புருடர், பிங்கலர்

50. <u>நிரல் படுத்துக.</u>
நாடகங்களின் காலவரிசை
(A) டம்பாச்சாரி விலாசம், பிரம்ம சமாஜம், மனோன்மணீயம், தாசில்தார் நாடகம்
(B) டம்பாச்சாரி விலாசம், தாசில்தார் நாடகம், பிரம்ம சமாஜம், மனோன்மணீயம்
(C) பிரம்ம சமாஜம், டம்பாச்சாரி விலாசம், தாசில்தார் நாடகம் மனோன்மணீயம்
(D) மனோன்மணீயம், பிரம்ம சமாஜம், டம்பாச்சாரி விலாசம், தாசில்தார் நாடகம்

51. <u>நிரல் படுத்துக.</u>
புதினங்களின் காலவரிசை
(A) பிரதாப முதலியார் சரித்திரம், சுகுணசுந்தரி, பத்மாவதி சரித்திரம், கமலாம்பாள் சரித்திரம்
(B) பத்மாவதி சரித்திரம், பிரதாப முதலியார் சரித்திரம், சுகுணசுந்தரி, கமலாம்பாள் சரித்திரம்
(C) பிரதாப முதலியார் சரித்திரம், சுகுணசுந்தரி, கமலாம்பாள் சரித்திரம், பத்மாவதி சரித்திரம்
(D) சுகுணசுந்தரி, பிரதாப முதலியார் சரித்திரம், பத்மாவதி சரித்திரம், கமலாம்பாள் சரித்திரம்

52. <u>நிரல் படுத்துக.</u>
இதழ்களின் காலவரிசை
(A) கலாமோகினி, தமிழ்மேகசின், பொன்னி, மணிக்கொடி
(B) பொன்னி, தமிழ்மேகசின், மணிக்கொடி, கலாமோகினி
(C) மணிக்கொடி, பொன்னி, கலாமோகினி, தமிழ்மேகசின்
(D) தமிழ்மேகசின், மணிக்கொடி, கலாமோகினி, பொன்னி

53. <u>நிரல் படுத்துக.</u>
ஐந்து வகையான தலைக்கோலங்கள்
(A) கொண்டை, குழல், சுருள், பனிச்சை, முடி
(B) கொண்டை, சுருள், குழல், பனிச்சை, முடி
(C) கொண்டை, சுருள், குழல், பனிச்சை, முடி
(D) கொண்டை, பனிச்சை, சுருள், குழல், முடி

54. <u>நிரல் படுத்துக.</u>
சங்க காலத்தில் ஊர் அமைப்பு முறை
(A) சிற்றூர், பேரூர்,மூதூர்,பட்டினம்
(B) சிற்றூர், மூதூர்,பேரூர்,பட்டினம்
(C) சிற்றூர், பட்டினம்,மூதூர்,பேரூர்
(D) சிற்றூர்,பட்டினம்,பேரூர்,மூதூர்

55. <u>நிரல் படுத்துக.</u>
மணிமேகலை காலத்தில் கட்டப்பட்ட வீட்டுமனை கட்டடக் கலையின் வரிசைமுறை
(A) மண்டபம், கூடம், தாயக்கட்டு,அடுக்களை
(B) மண்டபம், கூடம், அடுக்களை, தாயக்கட்டு
(C) மண்டபம், தாயக் கட்டு, கூடம், அடுக்களை
(D) கூடம், மண்டபம்,அடுக்களை,தாயக்கட்டு

56. <u>நிரல் படுத்துக.</u>
பயனிலை உவம உருபுகள்
(A) எள்ள, விழைய, புல்ல, பொருவ
(B) எள்ள, பொருவ, புல்ல, விழைய
(C) எள்ள, புல்ல, விழைய, பொருவ
(D) எள்ள, விழைய, பொருவ, புல்ல

57. <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (a) | காதை | (1) | கம்பராமாயணம் |
| (b) | இலம்பகம் | (2) | சூளாமணி |
| (c) | சருக்கம் | (3) | சிந்தாமணி |
| (d) | படலம் | (4) | சிலப்பதிகாரம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (4) | (2) | (1) | (3) |
| (B) | (4) | (1) | (2) | (3) |
| (C) | (4) | (3) | (2) | (1) |
| (D) | (4) | (3) | (1) | (2) |

58. <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (a) | புலவர் பாடாது வரைக என் நிலவரை | (1) | நற்றினை |
| (b) | புதுமொழி கூட்டுண்ணும் புரிசைசூழ் புனலூர | (2) | சிறுபாணாற்றுப்படை |
| (c) | தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின் மதுரை | (3) | கலித்தொகை |
| (d) | நஞ்சும் உண்பர் நனிநா கரிகர் | (4) | புறநானூறு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (4) | (3) | (2) | (1) |
| (B) | (4) | (2) | (1) | (3) |
| (C) | (4) | (1) | (2) | (3) |
| (D) | (4) | (2) | (3) | (1) |

**59.** <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (a) | ஐயை | (1) | சிந்தாமணி |
| (b) | ஆதிரை | (2) | பெருங்கதை |
| (c) | சாங்கியத் தாய் | (3) | மணிமேகலை |
| (d) | விசையை | (4) | சிலப்பதிகாரம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (4) | (2) | (1) | (3) |
| (B) | (4) | (3) | (1) | (2) |
| (C) | (4) | (3) | (2) | (1) |
| (D) | (4) | (1) | (3) | (2) |

**60.** <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (a) | பொய்யாமொழிப்புலவர் | (1) | குற்றாலக் கோவை |
| (b) | மாணிக்கவாசகர் | (2) | திருவாரூர்க்கோவை |
| (c) | திரிகூடராசப்பக்கவிராயர் | (3) | தஞ்சைவாணன் கோவை |
| (d) | கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் | (4) | திருக்கோவையார் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (3) | (1) | (2) | (4) |
| (B) | (3) | (4) | (1) | (2) |
| (C) | (3) | (2) | (4) | (1) |
| (D) | (3) | (1) | (2) | (4) |

**61.** <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (a) | ஒழியிசை | (1) | மா |
| (b) | ஈற்றசை | (2) | ஈ |
| (c) | முன்னிலையசை | (3) | ஏ |
| (d) | வியங்கோளசை | (4) | ஒ |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (4) | (3) | (1) | (2) |
| (B) | (4) | (1) | (2) | (3) |
| (C) | (4) | (3) | (2) | (1) |
| (D) | (4) | (1) | (3) | (2) |

**62.** <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (a) | இரண்டாம் வேற்றுமை | (1) | நீங்கல் |
| (b) | மூன்றாம் வேற்றுமை | (2) | கிழமை |
| (c) | ஐந்தாம் வேற்றுமை | (3) | செயப்படுபொருள் |
| (d) | ஆறாம் வேற்றுமை | (4) | உடனிகழ்ச்சி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (3) | (4) | (1) | (2) |
| (B) | (3) | (4) | (2) | (1) |
| (C) | (3) | (2) | (1) | (4) |
| (D) | (3) | (1) | (2) | (4) |

**63.** <u>பொருத்துக:</u>

| | | | | |
|---|---|---|---|---|
| (a) | பிரகலாதா | | (1) | அறிஞர் அண்ணா |
| (b) | சொர்க்கவாசல் | | (2) | இந்திரா பார்த்தசாரதி |
| (c) | ஔரங்கசீப் | | (3) | கரு.அழ.குணசேகரன் |
| (d) | பலி ஆடுகள் | | (4) | சங்கரதாஸ் சுவாமிகள் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (4) | (2) | (1) | (3) |
| (B) | (4) | (1) | (2) | (3) |
| (C) | (3) | (2) | (4) | (1) |
| (D) | (1) | (3) | (2) | (4) |

**64.** <u>பொருத்துக:</u>

| | | | | |
|---|---|---|---|---|
| (a) | என்சரித்திரம் | | (1) | திரு.வி.க. |
| (b) | அக்கினிச்சிறகு | | (2) | நாமக்கல் கவிஞர் |
| (c) | என்கதை | | (3) | உ.வே.சா. |
| (d) | வாழ்க்கைக் குறிப்பு | | (4) | அப்துல் கலாம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (4) | (1) | (3) | (2) |
| (B) | (3) | (2) | (1) | (4) |
| (C) | (3) | (4) | (2) | (1) |
| (D) | (4) | (2) | (1) | (3) |

**65.** <u>பொருத்துக:</u>

| | | | | |
|---|---|---|---|---|
| (a) | பாரதிதாசன் | | (1) | தைப்பாவை |
| (b) | நாமக்கல் கவிஞர் | | (2) | சுவரும் சுண்ணாம்பும் |
| (c) | கண்ணதாசன் | | (3) | அவனும் அவளும் |
| (d) | சுரதா | | (4) | கடல்மேற் குமிழிகள் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (4) | (1) | (3) | (2) |
| (B) | (1) | (3) | (2) | (4) |
| (C) | (2) | (4) | (3) | (1) |
| (D) | (4) | (3) | (1) | (2) |

**66.** <u>பொருத்துக:</u>

| | | | | |
|---|---|---|---|---|
| (a) | படைத்தல் | | (1) | தூக்கிய திருவடி |
| (b) | அளித்தல் | | (2) | ஊன்றிய பாதம் |
| (c) | அழித்தல் | | (3) | உடுக்கை |
| (d) | மறைத்தல் | | (4) | அபயமுத்திரை |
| (e) | அருளல் | | (5) | அழல |

| | (a) | (b) | (c) | (d) | (e) |
|---|---|---|---|---|---|
| (A) | (3) | (4) | (5) | (2) | (1) |
| (B) | (1) | (2) | (3) | (5) | (4) |
| (C) | (2) | (1) | (5) | (3) | (4) |
| (D) | (5) | (4) | (1) | (2) | (3) |

**67.** <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (a) | அண்ணாமலை ரெட்டியார் | (1) | கருணாமிர்த சாகரம் |
| (b) | மாம்பழக் கவிராயர் | (2) | யாழ் நூல் |
| (c) | விபுலானந்த அடிகள் | (3) | கீர்த்தனை |
| (d) | ஆபிரகாம் பண்டிதர் | (4) | காவடிச்சிந்து |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (1) | (2) | (3) | (4) |
| (B) | (4) | (3) | (2) | (1) |
| (C) | (2) | (4) | (3) | (1) |
| (D) | (3) | (4) | (1) | (2) |

**68.** <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (a) | தலையணி | (1) | சிலம்பு |
| (b) | காதணி | (2) | முத்து மாலை |
| (c) | கழுத்தணி | (3) | மகரக்குழை |
| (d) | கால் அணி | (4) | பொற்பூ |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (4) | (2) | (3) | (1) |
| (B) | (1) | (2) | (3) | (4) |
| (C) | (3) | (2) | (1) | (4) |
| (D) | (4) | (3) | (2) | (1) |

**69.** <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (a) | இராசராசன் விருது | (1) | அகிலன் |
| (b) | சாகித்திய அகாதமி விருது | (2) | அவ்வை நடராசன் |
| (c) | ஞானபீடவிருது | (3) | சிற்பி |
| (d) | பத்மஸ்ரீ விருது | (4) | சுத்தானந்த பாரதி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (4) | (2) | (1) | (3) |
| (B) | (1) | (2) | (4) | (3) |
| (C) | (1) | (2) | (3) | (4) |
| (D) | (4) | (3) | (1) | (2) |

**70.** <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (a) | சூறாவளி | (1) | வை.கோவிந்தன் |
| (b) | எழுத்து | (2) | வ.வே.சு.ஐயர் |
| (c) | சக்தி | (3) | க.நா.சு. |
| (d) | பாலபாரதி | (4) | சி.சு.செல்லப்பா |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (3) | (4) | (1) | (2) |
| (B) | (1) | (2) | (3) | (4) |
| (C) | (2) | (3) | (1) | (4) |
| (D) | (4) | (1) | (2) | (3) |

பின்வரும் பகுதியைப் படித்துப் பார்த்து தொடர்ந்து இடம் பெற்றுள்ள வினாக்களுக்கு ஏற்ற விடையைச் சுட்டுக.(71 – 75)

திராவிடம் என்பதைப் பதினெண்பாடைகளில் ஒன்றாகச் சேந்தன் திவாகரம் குறிக்கின்றது. திராவிடம் எனும் சொல்லைத் தாயுமானவர் ஆண்டுள்ளார். எனினும் அது மொழியையும்,

மக்களையும், நாட்டையும் குறிப்பதாக உலகோர் பலர் குறிப்பிட்டுள்ளனர். பிளைனி, 'தார்தே' எனக் குறிப்பிடுவது திராவிடம் என்றும், 'துரோபினோ' என அவர் சுட்டுவது திராவிட நாடு என்றும் பெரிப்ளூஸ் 'டிமிரிகா' எனக் குறிப்பது தமிழகம் என்றும், தாலமி, 'லிமிரிகே' எனக் குறிப்பது தமிழகம் என்றும் யுவான் சுவாங், 'திலோபிடு' எனக் குறிப்பது திராவிட நாடு என்றும் கூறுவர். திராவிடம் எனும் மொழிக் குடும்பத்திற்கு இப்பெயரை முதன் முதல் ஆங்கிலத்தில் கால்டுவெல் (1856) பயன்படுத்தினார். பின்னர் குண்டர்ட் (1872) மலையாளத்திலும், கிட்டல் (1894) கன்னடத்திலும், மாக்சுமுல்லர் ஜெர்மனிலும் இச் சொல்லை இப்பொருளில் பயன்படுத்தியிருந்தனர்.

**71.** திராவிடம் என்பதை எத்தனை மொழிகளுள் ஒன்றாகத் திவாகரம் குறிக்கிறது ?

(A) 38 (B) 28
(C) 18 (D) 48

**72.** திராவிட மொழிக் குடும்பம் என முதன்முதல் குறிப்பிட்டவர்

(A) கால்டுவெல் (B) குண்டர்ட்
(C) மாக்சுமுல்லர் (D) கிட்டல்

**73.** <u>நிரல் படுத்துக.</u>

மேற்காட்டிய பகுதியில் இடம் பெற்றுள்ள அறிஞர்களின் வரிசை

(A) பிளைனி, யுவான்சுவாங், தாலமி, பெரிப்ளூஸ்
(B) பிளைனி, தாலமி, யுவான் சுவாங், பெரிப்ளூஸ்
(C) பிளைனி, யுவான் சுவாங், பெரிப்ளூஸ், தாலமி
(D) பிளைனி, பெரிப்ளூஸ், தாலமி, யுவான் சுவாங்

**74.** <u>பொருத்துக:</u>

(a) பிளைனி (1) திலோபிடு
(b) பெரிப்ளூஸ் (2) தார்தே
(c) தாலமி (3) டிமிரிகா
(d) யுவான் சுவாங் (4) லிமிரிகே

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (1) | (2) | (3) | (4) |
| (B) | (2) | (3) | (4) | (1) |
| (C) | (2) | (1) | (4) | (3) |
| (D) | (2) | (4) | (3) | (1) |

**75.** <u>பொருத்துக:</u>

(a) ஜெர்மன் (1) குண்டர்ட்
(b) ஆங்கிலம் (2) கிட்டல்
(c) மலையாளம் (3) மாக்சுமுல்லர்
(d) கன்னடம் (4) கால்டுவெல்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (3) | (1) | (2) | (4) |
| (B) | (3) | (4) | (2) | (1) |
| (C) | (3) | (4) | (1) | (2) |
| (D) | (3) | (2) | (1) | (4) |

**Space For Rough Work**